நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள்
(எச்.என் 2) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

**கடிதஎண் 5916/எச்.என்2/2021–1, நாள் 12.05.2021**

அனுப்புநர்
முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப.,
அரசு தலைமைச் செயலாளர்

பெறுநர்
தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், சென்னை–28
திட்ட இயக்குநர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II, சென்னை–28
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை–25
தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை, சென்னை–25
தலைமைப் பொறியாளர் (பெருநகரம்), நெடுஞ்சாலைத்துறை, சென்னை–25
தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத்துறை, சென்னை–25
தலைமைப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, சென்னை–25
இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், சென்னை–25
தலைமைப் பொறியாளர் (திட்டம், வடிவமைப்பு (ம) ஆய்வு), நெடுஞ்சாலைத்துறை, சென்னை–25
தலைமைப் பொறியாளர் (நபார்டு (ம) கிராமச் சாலைகள்), நெடுஞ்சாலைத்துறை, சென்னை–25
தலைமைப் பொறியாளர், சென்னை–கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம், சென்னை–25
நிருவாக இயக்குநர், தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம், சென்னை–2

அய்யா / அம்மையீர்,

பொருள்: நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் மாநகராட்சிப் பகுதிகளில் சாலைகளை மேம்படுத்துதல் / உறுதிப்படுத்துதல் – சில அறிவுரைகள் – வழங்கப்படுகிறது.

பார்வை:
1. தலைமைப் பொறியாளர் (க (ம)ப), நெடுஞ்சாலைத்துறை குறிப்பாணை எண் 4000/திட்டம்/2008, நாள் 26.03.2018
2. வழக்கு எண்.1903/2020 சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு நாள், 28.02.2020

------

மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ள நெடுஞ்சாலைத்துறையைச் சார்ந்த சாலைகளில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்கெனவே உள்ள சாலை மட்டத்தினை உயர்த்துவதால் சாலையின் தன்மை (நடைபாதை, வடிகால் முதலியவை) பாதிக்கப்படுகிறது. மேலும், மாநகராட்சி எல்லைக்குள் இருக்கும் சாலைகள் ஏற்கெனவே இரண்டு அல்லது மூன்று அடுக்குகள் அடர் தார்தளம் (DBM) போடப்பட்டு இருக்கும். ஆதலால், மாநகராட்சி எல்லைக்குள் இருக்கும் சாலைகளில் மேலும் ஓர் அடுக்கு அடர் தார்தளம் போட்டு சாலை மட்டத்தை உயர்த்த வேண்டியது இல்லை.

2. எனவே, நெடுஞ்சாலைத்துறை மூலமாக மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி எல்லைக்குள் உள்ள சாலைகளில் பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளும் போது சாலைகளின் மேற்பரப்பை சுரண்டி எடுத்துவிட்டு (Milling) அதே அளவுக்கு மேற்தளம் அமைக்கும் வகையில் பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

- மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி எல்லைக்குள் உள்ளசாலைகளின் மேற்தளம் ஏற்கெனவே போதுமான கனத்துடன் (Crust) கட்டமைக்கப்பட்டுள்ளதால் பி.பி.டி. சோதனை மேற்கொள்ள வேண்டியதில்லை.

- எந்த சூழ்நிலையிலும், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி எல்லைக்குள் உள்ள சாலைகளில் மட்டம் அதிகரிக்கப்படக்கூடாது.

- **சாலைகளின் மேற்தள கட்டுமானத்தை மட்டும் தேவைப்படும் கனத்திற்கு சுரண்டி எடுத்துவிட்டு (Milling) அதே அளவுக்கு மேற்தளம் இடவேண்டும். இது வீடுகளுக்குள் நீர் புகுவதைத் தடுக்கும்.**

- மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி எல்லைக்குள் உள்ள சாலைகளில் தார் மேற்தளத்திற்கு (BC) மட்டுமே அனுமதி அளிக்கப்படும்.

- சாலை தார் மேற்தள கனமானது ( thickness of BC), இந்திய சாலை காங்கிரஸ் விதி 37 – 2018–ன் படி சாலையின் போக்குவரத்து செறிவுக்கேற்ப மாறுபடும்.

தங்கள் உண்மையுள்ள,

12/05/2021

அரசு தலைமைச் செயலாளருக்காக

<u>நகல்</u>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3
ஆணையர், நகராட்சி நிர்வாகம், சென்னை–28